ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2118/78 - 2019 අප්‍රේල් මස 12 වැනි සිකුරාදා - 2019.04.12
*2118/78 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

*எனது இல. : டீஜவீஜபி/எல்என்டீ/ எல்ஏடீஏகியூ/சீஈபி/05/2015/16.*

*காணி அமைச்சின் குறிப்பு இல. : 4/3/7/2016/ எச்டபிள்யூ/538.*

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், இப்பாகமுவ பிரதேச செயலாளர் பிரிவில், இஹல விசிதெகே மேற்கு சிறு பிரிவில், இல. 522, பக்மீகொல்ல கிராம அலுவலர் பிரிவில், பரணகம்பிடிய கிராமத்தில் அமைந்துள்ள சிரேஷ்ட நில அளவையாளரினால் 2019.02.22 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இறுதி வரைபட இல. 1187, பிற்சேர்க்கை இல. 04, தாள் இல. 06 எனக் குறிப்பிடப்பட்ட 0.0299 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய துண்டு இல. 14902 காணித் துண்டு 1 இன் விபரங்கள் பின்வருமாறு:

*01. துண்டு இல. 14902*

காணியின் பெயர்: வதுமுல்லேகுபுர; விபரம்: வயல்; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: 13454வது காணித்துண்டின் ஒரு பகுதி, காணி எடுத்தற் சட்டத்தின் 38(அ) அத்தியாயம் கீழ் பெற்றுக் கொள்ளப்பட்டது. ஆரம்ப உரிமை கோருபவர் செய்யது அஹமது நபீஸான். காணி எடுத்தல் நடவடிக்கைகளை முடிவுக்கு கொண்டு வருவதற்காக (ச.மீ 299); விஸ்தீரணம்: 0.0299 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 10 ஆந் திகதி மு. ப. 09.30 மணிக்கு இப்பாகமுவ பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டு தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு மே மாதம் 27 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எம். ஏ. எஸ். மாரசிங்க,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
இப்பாகமுவ.

*04 - 1089*